**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>தாராபுரம்</u>**

**முன்னிலை : திரு.V.ஜான் மினோ., பி.ஏ.,பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**2024–ம் ஆண்டு ஜுன் திங்கள் 11–ம் நாள் செவ்வாய்கிழமை**
<u>இ.ம.எண். 2/2023</u>

**இன்**

**இ.ம.எண்.1/2022**

**இன்**

**<u>அ.வ.எண்.2/2022</u>**

N.செல்லமுத்து ...மனுதாரர்

// எதிர் //

1.C.சுப்பிரமணியம்(இறப்பு) 1–ம் எதிர்மனுதாரர்
2.சாமியாத்தாள்
3.கலையரசி
4.ரவிச்சந்திரன்
.... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்னர் 03.06.2024–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் காலஞ்சென்று விட்ட நிலையிலும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

காலஞ்சென்ற, 1–ம் எதிர்மனுதாராரின் வாரிசுகளை இ.ம.எண்.1/2022–ல், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்கக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22, விதி 4–ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர், அசல் வழக்கில் வாதி. மனுதாரர் தரப்பில், தாவா கடனுறுதிச் சீட்டின் பேரில் கடன் தொகை கேட்டு தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு நிலுவையில் இருந்த

நிலையில், 1-ம் எதிர்மனுதாரர், 22.11.2022 அன்று காலஞ்சென்று விட்டார். 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள். 1-ம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை வாரிசு அடிப்படையில், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அடைந்து அனுபவித்து வருவதால், தாவா கடனை செலுத்த கடமைப்பட்டவர்கள். எனவே, காலஞ்சென்ற 1-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளான, 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை இ.ம.எண்.1/2022-ல், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்க உத்தரவிடக்கேட்டு, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காத பட்சத்தில், மனுதாரருக்கு கஷ்டநஷ்டம் ஏற்படும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**3. <u>2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.3/2023-ல் தாக்கல் செய்த எதிருரையை, இம்மனுவிலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை ஏற்றுக் கொண்டதன் சுருக்கம் :</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். தாவா கடனுறுதிச்சீட்டு மோசடியான ஆவணம். மனு சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சொத்துக்களை வாரிசு அடிப்படையில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்பது உண்மையல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:-**

மனுதாரர் தரப்பில், மனுதாரர், தாவா கடனுறுதிச் சீட்டின் பேரில் கடன் தொகை கேட்டு தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், 1-ம் எதிர்மனுதாரர், 22.11.2022 அன்று காலஞ்சென்று விட்டார் என்றும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் என்ற அடிப்படையில், 1-ம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருவதால், தாவா கடனை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், எனவே, காலஞ்சென்ற 1-ம் எதிர்மனுதாரரின்

வாரிசுகளான, 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை, இ.ம.எண்.1/2022–ல், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்க உத்தரவிடக்கேட்டு, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

6. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட தாவா கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு சங்கதிகளை, மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

7. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, மனுதாரர் தரப்பில், மனுதாரர், தாவா தொகை கேட்டு, 1–ம் எதிர்மனுதாரர் மீது, இ.ம.எண்.1/2022 தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது, 1–ம் எதிர்மனுதாரர் காலஞ்சென்று விட்டதால், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1–ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் என்ற நிலையில், 1–ம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வருவதால், 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை, இ.ம.எண்.1/2022–ல் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்கக் கேட்டு, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு ஜூன் மாதம் 11–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V JOHN MINO Digitally signed by V JOHN MINO Date: 2024.06.11 17:48:20 +0530

3 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

V JOHN MINO Digitally signed by V JOHN MINO Date: 2024.06.11 17:48:26 +0530

3 வது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

Order IN
IA.2/2023 IN
OS.No.2/2022
Date:11.06.2024
III ADJ,DPM